# பாதுகாப்பான பாடசாலைகள் மிகவும் ஆற்றல்மிக்க பாடசலைகள்

## பெற்றோருக்கு ஒரு யுக்தி

உங்களது பிள்ளை கொடுமைப்படுத்தி அடக்கப்பட்டால், அல்லது அவர் மற்றவர்களைக் கொடுமைப்படுத்தி அடக்கினார் என்று நீங்கள் கண்டுபிடித்தால் அது உங்களுக்கு மிகவும் மன அழுத்தம் கொடுக்கக் கூடியதாகவும், நிலைகுலைய வைப்பதாகவும் இருக்கும். அநேகமான பெற்றோர் தொடக்கத்தில் கோபம், குழப்பமடைதல், மற்றும் குற்றப்பழி ஆகியவற்றை அனுபவிப்பார்கள்.

பின்வரும் தகவல்கள் உங்களுக்கு கொடுமைப்படுத்தி அடக்கும் நிகழ்ச்சிகளை கையாளத் தேவையான பயனுள்ள யுக்திகளை அளிக்கும் வகையில் தயாரிக்கப் பட்டது.

### கொடுமைப்படுத்தி அடக்குதல் என்றால் என்ன?

கொடுமைப்படுத்தி அடக்குதல் என்றால் ஒருவர் அல்லது பலர் அடங்கிய ஒரு குழு அந் நேரத்தில் ஆற்றல் மிக்கவராயிருந்து வேண்டுமென்று இன்னொருவரை ஒரு தரத்திறகு மேற்பட்ட தடவைகளில் நிலைகுலைய வைப்பது அல்லது தீங்கு விளைவிப்பதாகும். கொடுமைப்படுத்தி அடக்குதல் உடல் சார்ந்த, தாக்குதல் அல்லது பேச்சு சார்ந்த பெயர் சொல்லிக் கூப்பிடுதல், அல்லது மறைமுகமான வதந்திகள் பரப்புவது போன்றவையாகும்.

### பின்வருவன கொடுமைப்படுத்தி அடக்குதல் அல்ல

- ஒரு பரஸ்பரமான சச்சரவுள்ள ஒரு நிலைமை – அதாவது மாணவர்கள் ஒரே சமயத்தில் நிலைகுலைந்தும், ஒரு பிரச்சினைக்கு தீர்வை எதிர்பார்க்கும் வேளை.
- சமூக மறுத்தொழிப்பு அல்லது வெறுப்பு (இது திரும்பத் திரும்பச் செய்யப்படும் ஒரு செயல் அல்லாமலும், ஒரு குறிப்பிட்ட நபரைக் குறிவைத்து செய்யப்படாமலும் இல்லாவிட்டால்).





- ஒரு முறை செய்யப்பட்ட கெடுதி அல்லது அற்ப செயல் அல்லது தொடர்பின்றி செய்யப்பட்ட முரட்டு வேலை அல்லது அச்சுறுத்தல் ஆகியவை.

### எனது பிள்ளை கொடுமைப்படுத்தி அடக்கப்பட்டார் என்று எப்படி நான் அறிவேன்?

ஒரு பிள்ளை கொடுமைப்படுத்தி அடக்கப்பட்டார் என்பதற்கு பின்வரும் சில அடையாளங்கள் உள்ளடங்கும்:

- பாடசாலைக்குச் செல்ல விருப்பமின்மை அல்லது மறுத்தல்
- காலையில் சுகயீனமுற்றதாக உணர்தல்
- அனுமதியின்றி பாடசாலைக்கு செல்லாதிருத்தல்
- பாடசாலை வேலைகளைக் குறைவாக நிறைவேற்றல்
- பின்வாங்குதல், கொன்னையாகப் பேசத் தொடங்குதல், நம்பிக்கை இழத்தல்
- அழுதபடி நித்திரைக்குச் செல்தல், கொடுங்கனவுகள் காண்தல்
- பணம் கேட்டல் அல்லது களவாடத் தொடங்குதல் (கொடுமைப்படுத்தி அடக்குபவருக்கு கொடுக்க)
- என்ன பிரச்சினை என்று பேச மறுத்தல்
- காரணம் தெரியாத கன்றிப்போன காயங்கள், வெட்டுகள், கீறல்கள்
- பிற பிள்ளைகளை அல்லது தனது சகோதர/சகோதரிகளை கொடுமைப்படுத்தி அடக்கத் தொடங்குதல்
- முரடராக அல்லது நேர்மையற்றவராக மாறுதல்

*கிட்ஸ்கேப்* இல் இருந்து எடுக்கப்பட்டது இது பின்வரும் வலைத் தளத்தில் கிடைக்கும்

**www.kidscape.org.uk/parents/signsof.shtml**



## எனது பிள்ளை கொடுமைப்படுத்தி அடக்கப்பட்டால் நான் அதற்கு என்ன செய்ய முடியும்?

**படி 1:** பிள்ளைக்கு கவனமாக செவிமடுத்து உங்களது அக்கறையையும், ஆதரவையும் காண்பிக்கவும்.

**படி 2:** நல்லறிவுள்ள புத்திமதி கூறுங்கள் – எதிர்த்து போராடும்படி உற்சாகப் படுத்த வேண்டாம் இது எப்போதும் கொடுமைப்படுத்தி அடக்குதலை அதிகரிக்கும்.

**படி 3:** உங்களது பிள்ளை நேர்மறையான யுக்திகளை விருத்தி செய்யும்படி கூறுங்கள். பின்வருவன உட்பட:

- என்னை தனியாக இருக்க விடுங்கள் என்று கூறி அமைதியாக வெளியேறுதல்
- மேலதிக கொடுமைப் படுத்தி அடக்குதலுக்கு உட்படுத்தப்படும் நிலமைகளை தவிர்த்தல்
- புதிய நண்பர்களை ஏற்படுத்தல்.

**படி 4:** இது திரும்பவும் ஏற்படும் பாணி உள்ளதா என்று அறிய உங்களது பிள்ளையிடம் பின்வரும் கேள்விகளைக் கேளுங்கள்:

- என்ன, எங்கே, மற்றும் எப்போ இந்த நிகழ்ச்சி நடந்தது?
- ஒவ்வொரு தருணத்திலும் யார் சம்பந்தப் பட்டார்கள்?
- வேறு யாரும் இதைக் கண்டார்களா, அப்படியானால் அது யார்?
- பிரச்சினையைத் தீர்க்க என்ன வழிமுறைகள் இதுவரை கையாளப்பட்டது?
- இந்த பிரச்சினையை அறிந்த ஆசிரியர்கள் எவரினாவது பெயர்கள்.

**படி 5:** பிரச்சினையைத் தீர்க்க உங்களது பிள்ளையின் பாடசாலையுடன் சேர்ந்து வேலை செய்யுங்கள். பாடசாலைகள் கொடுமைப்படுத்தி அடக்கும் நடத்தைக்கு மிகவும் கடுமையாக பொறுப்பெடுக்கின்றன. கொடுமைப்படுத்தி அடக்கும் பிரச்சினையைத் தீர்க்க பெற்றோர்கள் பாடசாலையுடன் சேர்ந்து வேலை செய்யும்போது பாடசாலைகள் கூடுதலான வெற்றிகளைப் பெறுகின்றன.

*உங்களுக்கு உங்கள் பிள்ளை கொடுமைப்படுத்தி அடக்கப்பட்டார் என்று தெரியாவிட்டால் ஒரு வேளை உங்கள் பிள்ளையின் ஆசிரியருக்கும் அதைப்பற்றி தெரியாமல் இருக்கக்கூடும்.*

நீங்கள்:

- உங்கள் பிள்ளையின் ஆசிரியருடன் ஒரு சந்திப்பு வேளையை ஏற்படுத்தி சந்திப்பின் போது என்னென்ன விடயங்களைப் பற்றி கதைக்க வேண்டும் என்று குறிப்பெடுக்க வேண்டும்
- சந்திப்பின் போது அமைதியாக இருந்து நீங்களும் பாடசாலையும் கூட்டாளிகளாக இருந்து இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நீங்கள் பாடசாலையுடன் சேர்ந்து வேலை செய்கிறீர்கள் எனபதைத் தெளிவாக்கும் வகையில் நடந்து கொள்ளுங்கள்.

**பாடசாலைக்கு புலன் விசாரணை செய்யவும், அத்தோடு ஆசிரியர்களுடன் மற்றும் ஒரு வேளை வேறு மாணவருடன் கதைப்பதற்கும் சில காலம் தேவைப்படும்.**

**படி 6:** என்ன நடைபெற்றது என்று அறிய நீங்கள் பாடசாலையை தொலைபேசியில் அழைக்கலாம் மாற்றாக பாடசாலை எப்போது இது பற்றி எனக்கு அறிவிக்கும் என்று பாடசாலையைக் கேட்கலாம்.



**படி 7:** தற்போதைய நிலைமையையும் வருங்கால நிகழ்ச்சிகளையும் கையாள பாடசாலையுடன் சேர்ந்து வேலை செய்து ஒரு திட்டத்தை நிறுவுங்கள். நீங்கள் விடைபெறுமுன் திட்டத்தின் அடுத்த படிகளின் விளக்கத்தைக் கேட்கவும்.

**படி 8:** தேவைப்பட்டால் பாடசாலை கவுன்சிலரை சம்பந்தப்படும்படி கேளுங்கள்.

**படி 9:** ஏதாவது மேலதிக கொடுமைப்படுத்தி அடக்கும் நிகழ்சிகளை உங்களது பிள்ளை அவருக்கு விசுவாசமான ஒரு ஆசிரியருக்கு அறிவிக்கும்படி உற்சாகப் படுத்துங்கள்.

## எனது பிள்ளை கொடுமைப்படுத்தி அடக்கப்பட்டால் நான் செய்யக்கூடாதது என்ன?

- உங்களது பிள்ளை கொடுமைப்படுத்தி அடக்கப்பட்டதில் சம்பந்தப்பட்டிருக்கக்கூடும் என்று சந்தேகிக்கும் வேறு ஒரு மாணவனை நேரடியாக நீங்கள் அணுக வேண்டாம்.
- அம் மாணவர்களின் பெற்றோருடன் இந்த விடயங்களை கலந்தாலோசிக்க முயற்சி செய்ய வேண்டாம். அநேகமாக இது நிலைமையை மேலும் மோசமடையச் செய்யும்.

## எனது பிள்ளை மற்றவர்களை கொடுமைப்படுத்தி அடக்கினால் என்ன நடக்கும்?

- எதிர்ப்பு தெரிவிக்காமல் அமைதியாக பிரதிச் செயலாற்றுங்கள். அத்தோடு பாடசாலையுடன் சேர்ந்து பிரச்சினையைக் கையாள உதவியளிக்கும் வகையில் செயலாற்றுவதை உறுதி செய்யுங்கள்.
- இந்த நிலைமை உங்களது பிள்ளைக்கு முக்கியமான முன்னேற்ற படிப்பினையை கற்க வழங்கும் ஒரு சந்தர்ப்பம் என்று உணருங்கள்.

## எனது பிள்ளை மற்றவர்களை கொடுமைப்படுத்தி அடக்கினால் நான் செய்யகூடாதது என்ன?

- கொடுமைப்படுத்தி அடக்கப்பட்ட மாணவனையோ அல்லது அவர்களது பெற்றோரையோ நீங்கள் நேரடியாக அணுக வேண்டாம். அல்லது வேறு பெற்றோரை உங்களது பிள்ளையின் சார்பாகச் செயலாற்றும்படி கேடகவும் வேண்டாம்.

## பாடசாலையில் கொடுமைப்படுத்தி அடக்குதலைக் குறைக்க நான் என்ன செய்யலாம்?

- உங்களது சொந்தப் பிள்ளைக்கு ஏற்பட்ட சம்பவங்கள் மட்டுமன்றி எல்லா கொடுமைப் படுத்தி அடக்கப்படும் சம்பவங்களையும் பாடசாலைக்கு முறையிடுங்கள்.
- நீங்கள் எவ்வளவு தீவிரமாக கொடுமைப்படுத்தி அடக்குதலை எதிர்க்கிறீர்கள் என்று உங்களது பிள்ளைக்கு தெரியப்படுத்துங்கள்.
- வீட்டில் எந்தவகையான கொடுமைப்படுத்தி அடக்குதலையும் தவிர்க்க வேண்டும். அத்தோடு மற்றவர்களுக்கு மரியாதை கொடுப்பதற்கு முன்மாதிரி அளிக்கப்பட்டு உற்சாகப்படுத்தப்பட வேண்டும்.
- நல்ல தோழமை சம்பந்தப்பட்ட அம்சங்களை உங்களது பிள்ளையுடன் கதைத்து தவறாக நடத்தப்படும் அல்லது அவமரியாதை செய்யபடும் தோழமையில் தொடர்ந்து இருப்பதில் நம்பிக்கை இழக்கச் செய்யவும்.

## பயனுள்ள வலைத்தளங்கள்:

பாதுகாப்பான பாடசாலைகள் மிகவும் ஆற்றல்மிக்க பாடசாலைகள்
(Safe Schools are Effective Schools):
**www.sofweb.vic.edu.au/wellbeing/safeschools/bullying/index.htm**

மாணவர் நடத்தை விதிகள்
(Student Code of Conduct):
**www.sofweb.vic.edu.au/wellbeing/welfare/conduct.htm**

கொடுமைப்படுத்தி அடக்குதல். ஒருபோதும் இல்லை ஏன்!
(Bullying. No Way!):
**www.bullyingnoway.com.au**



safe schools are effective schools